பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 24 வியாழக்கிழமை 07.05.2020 கதிர் 51



# கொரோனாவிலிருந்து நாடு மீளும் வேளை அண்மையில்!

## இப்படிக் கூறுகின்றார் பிரதமர் மஹிந்தர் வெசாக் செய்தியில் நம்பிக்கை வெளியீடு

**கொழும்பு,மே 07**

**கடுமையான அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் பௌத்தருக்கே உரித்தான மன அமைதியுடன் செயற்பட்டமையினால் இலங்கை வாழ் மக்களை அந்தத் தொற்று நோயிலிருந்து வெற்றிகரமாக மீட்டெடுப்பதற்கான நேரம் மிகவும் அண்மித்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

**வெசாக் பண்டிகையைக் கொண்டாடும் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

2


## 12 கடற்படையினர் தொற்றிலிருந்து மீண்டனர்!

கொழும்பு, மே. 07

கொரோனா தொற்றுக்குள்ளான கடற்படை உறுப்பினர்கள் 12 பேர் இதுவரை முழுமையாகக் குணமடைந்துள்ளனர்.

கடற்படைப்பேச்சாளர்லெப்டினன்ட் கொமான்டர் இசுறு சூரிய பண்டார இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கையில் இருந்து கடற்படையினர் விலகியுள்ளனர் என வெளியாகும் செய்திகளில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.



## 804 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே. 07

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான மேலும் 07 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2

## மற்றுமொரு தொகுதியினர் சொந்த ஊருக்கு

கொழும்பு, மே. 07

ஊரடங்குச் சட்டம் காரணமாக சொந்த ஊர்களுக்குச் செல்ல முடியாமல் கொழும்பில் சிக்கியிருந்த 1200 பேர் இன்று காலை அவர்களது இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

நுகேகொடை பொலிஸ் பிரிவில் இருந்த இவர்கள் கொழும்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிகாட்டலின் கீழ் அனுப்பப்பட்டனர்.

## கூட்டமைப்பு – மஹிந்த பேச்சு நகைப்புக்குரிய செயற்பட்டு

### சுரேஷ் பிரேமச்சந்திரன் சாடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 07

மைத்திரி ரணில் ஆட்சியில் பங்குதாரர்களாக இருந்த போது தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தமிழருக்கு விருப்பமில்லாதவர்கள் ஆட்சியிலுள்ளபோது கூட்டமைப்பினர் பேசுவது நகைப்பிற்குரிய விடயம் எனத் தெரிவித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்தச் சந்திப்புக்களின் ஊடாக அவர்கள் என்ன சாதித்தார்கள் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தன. ஆயினும் நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது

2

## ஊரடங்கு வேளையில் வீடு புகுந்து கொள்ளை

### பரந்தனில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 07

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாடு தழுவியதாக ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் நிலையில் நேற்று இரவு பரந்தனில் இனம்தெரியாத கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளதுடன் நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

பரந்தன் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நேற்று இரவு 10.30 மணிக்கு நுழைந்த இனம்தெரியாத கும்பல் ஒன்று வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்களை அடித்து நொருக்கியுள்ளதுடன் அங்கிருந்தவர்களை மிரட்டி நகை, பணம் என்பவற்றையயும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

2

## இராணுவ வாகனம் விபத்து சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று அதிகாலை ஏற்பட்ட வாகன விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளமை யுடன், மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலன்னறுவை - ஹபரணை வீதியில் உள்ள கிரித்தலை பகுதியிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பத்துப் பேர் பயணித்த இராணுவ வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகியே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது 8 இராணுவ வீரர்கள் காயமடைந்த நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பொலன்னறுவை

2

## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே. 07

நீர்வேலி தெற்குப் பகுதியில் இன்று காலை மேற்கொண்டதிடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீட்டில் கசிப்பு வடித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

2

## மருத்துவ உபகரணங்கள் சீனாவிலிருந்து வருகிறது

கொரோனா தொற்றை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கைக்கு மேலும் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களை சீனா வழங்க வுள்ளது.

இதற்கமைய, 30,000 பரிசோதனை கருவிகள் (PCR - Fluorescence Probing) தனிநபர் பாவனைக்கான (PPEs) பாதுகாப்பு உபகரணம் 15,000 என்பவற்றுடன் சீனாவின் விசேட விமானமொன்றுஇலங்கையைவந்தடையவுள்ளதென, இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சைனா ஈஸ்டன் விமான நிறுவனத்தின் எம்.யூ. 231 என்ற விமானமே மருத்துவ உபகரணங்களுடன் நாளை (8) இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மஹிந்த தரப்பினரின் ஒத்துழைப்போடு தேர்தலில் வெல்லக் கூட்டமைப்பு திட்டம்

## சொல்கிறார் செல்வராஜா கஜேந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பானம், மே. 07

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பில் ஈடுபட்டமை அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவோ அல்லது அரசியற் தீர்வுக்காகவே அல்ல. மாறாக மஹிந்த தரப்பின் ஒத்துழைப்போடு தாங்கள் அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவேதான். இன்று இரண்டு தரப்பினர்களுக்கும் மற்றொரு தரப்பினரின் ஆதரவு தேவைப்படும் நிலையில் பரஸ்பரம் ஒப்பந்தங்களைச் செய்து தமிழ் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரதமர் மஹிந்தவை கூட்டமைப்பினர் சந்தித்துள்ளனர். அந்தச் சந்திப்பின் பின்னர் அரசியல் கைதிகள் விடுதலை, அரசியல் தீர்வு குறித்து தாங்கள் பேசியிருக்கின்றனர் என ஊடகங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். இந்தச் செயற்பாடு என்பது உண்மையிலே அரசியல் தீர்வை நோக்கியதோ அரசியல் கைதிகளின் விடுதலையை நோக்கியதோ அல்ல.

மாறாக வரப் போகும் தேர்தலில் தாங்கள் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றி வெற்றி பெறுவதற்கான ஓர் உபாயமாகத் தான் மஹிந்தவோடு கூட்டுச் சேர்ந்து சந்திப்பு நாடகத்தைக் கூட்டமைப்பினர் நடத்தி முடித்திருக்கின்றார்கள்.

ஏனென்றால் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரைக்கும் கூட்டமைப்பு இந்த நாட்டின் ஆட்சியில் பங்காளிக் கட்சியாக இருந்தது. அதில் கூட்டமைப்பினர் விரும்பிக்கொண்டு வந்த மைத்திரி - ரணில் இணைந்த நல்லாட்சியும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த ஐந்து ஆண்டுகளில் அவர்கள் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக அக்கறையுடன் பேசியமை கிடையாது.

மாறாக அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்திருப்பதை நியாயப்படுத்தும் விதமாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கால அவகாசத்தை பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை அரசுக்கு முழு அளவில் முண்டு கொடுத்து இலங்கை அரசை நியாப்படுத்தி கால அவகாசத்தையும் தொடர்ச்சியாக பெற்றுக் கொடுத்து வந்தார்கள்.

2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலே ஐ.நா. ஆணையாளர் தன் அறிக்கையிலே பங்கரவாதத் தடைச் சட்டம் கொடூரமான தடைச்சட்டம் என்றும் அது நீக்கப்பட வேண்டுமென்றும் சுட்டிக் காட்டியிருந்தபோதும் கூட 2019 ஆம் ஆண்டு வரை இவர்கள் ரணில் - மைத்திரியோடு நல்லாட்சியில் பங்கெடுத்து வந்திருந்தனர்.

அவ்வாறாக இவர்கள் ஆட்சி செய்து காண்டிருந்த காலப்பகுதியில் அந்தச் சட்டத்தை நீக்கி சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்தக் கைதிகளை விடுவிப்பது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த கூட்டமைப்பினர் ரணிலோடு சேர்ந்து 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் ஒற்றையாட்சிக்குள் அடிப்படையில் அரசியல் தீர்வை பெறுவதற்கு எழுத்து மூலம் சம்மதம் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் இப்பொழுது தாங்கள் அரசியல் தீர்வு குறித்தும் அரசியல் கைதிகள் விடுதலை குறித்தும் பிரதமர் மஹிந்தவுடன் பேசியிருக்கிறோம் என்பது முழுக்க முழுக்க தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற ஒரு நடவடிக்கை. தாங்கள் ஏதோ திரும்பவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிக்கு வந்தால் மஹிந்த மற்றும் கோட்டாபயவுடன் சேர்ந்து அரசியல் கைதிகளை விடுவித்து விடுவோம் என்ற மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தி மக்களை ஏமாற்றி வெற்றி பெறுவதற்கான முயற்சிதான் இது - என்றார்.



## இராணுவ வாகனம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள கிரித்தலை இராணுவ முகாமில் இணைக்கப்பட்ட 31 வயதுடைய வர் எனக் கூறப்பட்டது. அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக் காக பொலன்னறுவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## 804 பேருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொற்றுநோயியல் பிரிவு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நேற்று வரை கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 797ஆக காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது ஏழு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதால் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 804 ஆக அதிகரித்துள்ளது.

## கொரோனாவிலிருந்து நாடு மீளும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு :-

இலங்கையைப் போன்றே முழு உலகும் கொரோனா தொற்றுநோயின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ள நிலையிலேயே இம்முறை புத்தபெருமானின் பிறப்பு, புத்தர் நிலை, பரிநிர்வாணம் இடம்பெற்ற வெசாக் பண்டிகையைக் கொண்டாட வேண்டியேற்பட்டுள்ளது.

கடுமையான அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் பௌத்தருக்கே உரித்தான மன அமைதியுடன் செயற்பட்டமையினால் இலங்கை வாழ் மக்களை அந்தத் தொற்று நோயிலிருந்து வெற்றிகரமாக மீட்டெடுப்பதற்கான நேரம் மிகவும் அண்மித்துள்ளது.

எனவே, நாம் தொற்று நோயிலிருந்து மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட போராட்டத்தின் வெற்றி பாதுகாக்கப்படும் வகையிலேயே வெசாக் பண்டிகையைக் கொண்டாட வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் அல்லது சுகாதார ரீதியான சட்டதிட்டங்கள் தர்மத்தின் அடிப்படையிலான வாழ்வுக்குத் தடையாக அமைய மாட்டா என்பதே எனது புரிதலாகும். இரண்டாயிரம் வருடங்களாக தர்மத்தின் அடிப்படையில் வாழ்வினைக் கழித்த பௌத்தர்களுக்கு வீட்டிலிருந்தவாறே பொருள் சார்ந்த மற்றும் கொள்கைப் பூஜைகளில் ஈடுபடுவதற்கான ஒழுக்கப் பயிற்சி காணப்படுகிறது.

வெசாக் தினத்தில் விளக்கேற்றி, அலங்காரங்களைச் செய்து உள மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்வது பௌத்தரின் பழக்கமாகும். தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தீமைகளிலிருந்து நீங்கு வதற்கும் நன்மைகளை அதிகரித்துக் கொள்வதற்கும் எவ்விதத்திலும் தடையாக அமைவதில்லை.

இந்த அனர்த்தத்தின் போது புத்த பெருமான் காட்டிய வழியே எமக்குப் பாதுகாப்பாக உள்ளது. வாழ்க்கை நிலையற்றது எனவும், நிலையான எதுவுமில்லை எனவும் போதிக்கும் புத்த போதனையின் உண்மைத் தன்மையினை இந்த அனர்த்த நிலைமையில் முழு உலகும் புரிந்துக் கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

உள்ளம், உடம்பு, வார்த்தைகள் ஆகிய மூன்று வாயில்களையும் கட்டுப் படுத்திக்கொள்ளுமாறு கூறும் புத்த போதனை இவ்வாறான அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான சிறந்த வழிமுறையாகும்.

ஏனைய நாடுகளுக்கு முன்னரே கோவிட் தொற்றினை வெற்றி கொள்வதற்கு பௌத்தர்கள் பழகிய, பயிற்சி பெற்ற அந்த பணிவொழுக்கமே காரணமாக அமைந்தது என நம்புகிறேன்.

எனவே வெசாக் காலத்தில் உள்ளம், உடம்பு, வார்த்தைகள் ஆகிய மூன்று வாயில்களையும் ஒழுக்கத்துடன் பேணி, மன அமைதியுடன் வாழ்வினை நோக்கி, மூவுலகிற்கும் கருணை காட்டி, நாம் மும்மணிகளினதும் ஆசியை வேண்டி நிற்போம். அனைத்து உயிர்களும் துன்பங்களின்றி, நோய்நொடிகளின்றி வாழப் பிரார்த்திப்போம்.

## கூட்டமைப்பு – மஹிந்த பேச்சு நகைப்புக்குரிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அதற்கான தேவை இப்போது இல்லை என்றும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தெரிவித்திருந்தனர். இத்தகைய நிலைமையிலேதான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரதமர் சந்தித்துக் கலந்துரையாட முடிவெடுத்திருந்தார்.

அந்தக் கூட்டத்தில் எந்தவித முடிவுகளும் எடுக்கப்படமாட்டாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் அது உத்தியோகபூர்வமான கூட்டமாக இல்லை. ஆகவே அலரி மாளிகையில் நடந்த கூட்டமானது நாடாளுமன்றத்தை நடத்தக்கூடிய கூட்டமாக இருக்காது. ஆயினும் பிரதமரைப் பொறுத்தவரை நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் அலரிமாளிகையில் சந்தித்துப் பேசுவதன் ஊடாகத் தாம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் சந்தித்திருக்கிறோம், அவர்களுக்கு நாட்டு நிலைமையை விளங்கப்படுத்தியிருக்கிறோம் என்று சொல்வதற்கான வாய்ப்பாகத்தான் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இதன் காரணமாக நாங்கள் உட்பட பல கட்சிகளும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கூட்டமைப்பு கலந்துகொண்டது. அவர்கள் என்னென்ன விடயங்கள் பேசினார்கள் என்பது தொடர்பிலும் அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலையில் பிரதமரின் வீட்டில் இடம்பெற்ற சந்திப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்பினர் பேசினர் எனவும் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

ஆனால் கூட்டமைப்பைப் பொறுத்தவரை புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்த காலத்திலிருந்து ஒரு சந்திப்புக்கான கோரிக்கையை தொடர்ந்து முன்வைத்து வந்தார்கள். ஆயினும் பிரதமரோ ஜனாதிபதியோ கூட்டமைப்பினரைச் சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தார்கள்.

அதாவது தேர்தல் முடிந்த பிற்பாடு சந்திக்கலாம் என்பதே அவர்களது பதிலாக இருந்தது. ஆனால் இப்பொழுது அரச தரப்பினரே அதாவது பிரதமரே ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தபோது அவர்கள் உடனடியாகவே அந்த அழைப்பை ஏற்றுப் போனார்களே தவிர இந்தக் கூட்டங்களினூடாக இவர்கள் என்ன சாதித்தார்கள் என்ற கேள்வி நிச்சயமாக எழுகிறது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக அரசியல் கைதிகள் பற்றி பேசியதாகவும், அவர்களை விடுவிப்பதைப் பற்றிக் கேட்டதாகவும், அவர்களை எவ்வாறு விடுவிக்கலாம் என்பது போன்ற விடயங்களைச் சுமந்திரன் பிரதமருக்கு சொல்வார் என்ற அடிப்படையில் பேசப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

ஆனால் இதற்கு முன்னதாக இவர்களது ஆட்சிக் காலத்தில் அதாவது ஐக்கிய தேசியக் கட்சியுடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் இணைந்து கூட்டமைப்பினர் ஆட்சியில் இருந்தபோது இந்த அரசியல் கைதிகளை இவர்களால் விடுவிக்க முடியவில்லை. ஆனால் இன்று இவர்களுக்குப் பிடிக்காத சிலர் ஆட்சியில் இருக்கின்ற பொழுது அரசியல் கைதிகளை விடுவிப்பார்கள் என்ற தோரணையில் பத்திரிகைகளில் செய்திகள் வருவதென்பது உண்மையாகவே ஒரு சிரிப்பிற்குரிய விடயம்.

ஆனால் அவ்வாறு அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டால் அது நல்ல விடயம். ஆனால் நிச்சயமாக விடுவிக்கப்படுவார்களா என்ற கேள்வி எழுகின்றது.

அதேபோல ஒரு புதிய அரசமைப்பு பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆனால் இவை எல்லாம் முடிந்துபோன விடயங்களாக - கடந்த நாடாளுமன்றத்திலேயே அது கைவிடப்பட்ட விடயங்களாக மாறிப் போன விடயங்களை மீண்டும் இப்போதுள்ள பிரதமரிடம் பேசியிருக்கின்றார்கள்.

ஆனால் தேர்தல் முடிந்த பிற்பாடுதான் இந்த நாட்டில் என்ன மாற்றத்தைக் குறித்தும் பேச முடியும். தற்போது ஒரு தேர்தலை எதிர்நோக்கியிருக்கிற சூழ்நிலையில் கூட்டமைப்பு முன்வைத்திருக்கக் கூடிய கோரிக்கைகள் பெயரளவில் அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும் கூட நடைமுறையில் இவை எல்லாம் செயற்படுத்தப்படுமா என்ற ஒரு பாரிய கேள்வி எழுகின்றது.

ஆகவே கூட்டமைப்பை பொறுத்தவரை எப்படியாவது மஹிந்தவுடன் ஒரு சுற்று பேச்சை முடித்துக் கொள்ளவேண்டும். அதனூடாக எப்படியாவது தங்களது தொடர்புகளை மீண்டும் புதுப்பித்தக் கொள்ள வேண்டும். என்றதொரு காரணத்திற்காகத்தான் அந்தச் சந்திப்பு நடைபெற்று இருந்தது - என்றார்.

## கசிப்புடன் இருவர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே ஒரு பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

அந்த வீட்டிலிருந்து பத்து லீற்றர் கசிப்பு மற்றும் 10 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கசிப்பு வடிப்பதற்கு பயன்படுத்தப்படும் சட்டி பானை , எரிவாயு சிலிண்டர் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஊரடங்கு வேளையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சமூக விரோதிகளின் வன்முறையில் வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருள்கள், தொலைக்காட்சி, வாகனம், மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் உள்ளிட்டவை அடித்து உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணையை மேற்கொண்டனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்ச்சைக்குரிய தீர்மானம்

நாட்டின் நிலைமை குறித்து சிவப்பு எச்சரிக்கை சில முக்கிய தரப்புகளினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

மக்களின் நடவடிக்கைகள், வர்த்தக செயற்பாடுகள், பொது இயங்கு நிலை ஆகியவை தொடர்பில் சில சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தளர்வு நிலையைக் காட்டுவதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றமை குறித்தே இந்தப் பொது எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய முக்கிய தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு பொதுவாக சர்வதேச தரத்தில் இருக்க வேண்டிய பொது மட்டத்தை எட்ட முன்பே அவசரப்பட்டு இலங்கை முன்நகர முயற்சிக்கின்றது. அது ஆபத்தானது என்று சிரேஷ்ட மருத்துவ அதிகாரி ஒருவர் அபாயமணி ஒலித்திருக்கின்றார்.

⁎ கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்களில் 85 வீதமானோருக்கு அது ஒன்றில் வெளிப்படையாக குணங்குறி ஏதும் காட்டுவதில்லை அல்லது ஆக மந்தமான குணங்குறியையே காட்டுகின்றது.

⁎ இரண்டு கோடி 20 லட்சம் மக்கள் ஜனத் தொகை கொண்ட இலங்கையின் ஆக 25 ஆயிரம் பேருக்கே கொரோனாத் தொற்றுத் தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது இலங்கையில் 890 பேரில் ஒருவரே அந்தப் பரிசோதனைக்கு உட்பட்டிருக்கின்றார்.

⁎ இந்த நிலையில் இலங்கையில் நிலைமை ஓரளவு தெளிவு என்ற முடிவுக்கு வருவது ஆபத்தானது. குறைந்த பட்சம் ஐந்து லட்சம் பேருக்காவது அத்தகைய சோதனையை நடத்தித் தெளிவான நிலைமை ஏற்பட்ட பின்னர்தான் அத்தகைய ஒரு திருப்திகரமான முடிவுக்கு வரமுடியும். அதற்கு முன்னர் தீர்மானம் எடுத்துக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது அவர சக்குடுக்கைத் தனமாகிப் பெரும் விபரீதங்களுக்கு வழி செய்து விடும்.

⁎ இப்போது அடங்கியிருப்பது போல அல்லது அடக்கப்பட்டிருப்பது மாதிரி தோற்றும் கொரோனா வைரஸின் இரண்டாவது அலைத் தாக்கம் ஏற்பாடுமானால், அது கட்டுமட்டில்லாமல் எகிறும். முதலாவது தாக்கத்தில் அது பரவலாக ஏற்பட்டு, மக்கள் மத்தியில் அதை எதிர்க்கும் வலிமை விருத்தியடைந்திருந்தால் இரண்டாவது அலை மோசமானதாக அமையாது. ஆனால், இலங்கை முதலாவது தாக்கத்துக்கு முழுமையாகவோ, பகுதியாகவோ முகம் கொடுக்கவில்லை. ஊரடங்கு, சமூக இடைவெளி பேணல், தனிமைப்படுத்தல் என்ற தந்திரோபாயங்கள் மூலம் கொரோனாவுக்கு முகம் கொடுக்காமல் தவிர்க்கும் உபாயத்தையே இலங்கை இதுவரை ஓரளவு வெற்றிகரமாகக் கைக் கொண்டிருக்கின்றது. எனவே, கொரோனாவின் இரண்டாவது அலையை இலங்கை எதிர்கொள்ளுமானால், வேறு சில நாடுகளில் ஏற்பட்டமைபோல அது மோசமானதாக இருக்கலாம்.

- இவ்வாறு சுகாதார மருத்துவ அதிகாரிகள் தரப்பில் இருந்து கடுமையான முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இந்த விடயம் குறித்து அதிக கரிசனையும் சிரத்தையும் வெளியிட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் நாட்டின் நிலைவரம் தொடர்பில் யதார்த்தப் புறச் சூழல் குறித்த உண்மை நிலைமையை சுகாதார அமைச்சும், அரசும் வெளிப்படையாக நாட்டுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் -

பரிசோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி, அதுபற்றிய திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்றும் -

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியிருக்கின்றது.

இதே சமயம் -

கொரோனா நோய் அறிகுறி தென்படாத எண்பது வீதமான நோயாளிகள் சமூகத்தில் ஆங்காங்கே இருக்கலாம் என இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயருவான் பண்டார எச்சரித்துள்ளார்.

எனவே இந்த நபர்கள் தொடர்பாகக் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும் எனவும், இல்லாவிட்டால் நோயாளிகள் மீண்டும் பெருகக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய கடும் எச்சரிக்கைகளுக்குள் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் அரசின் நடவடிக்கைக்கு காரணம் யாதாக இருக்க முடியும்?

ஒன்றில், கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்குவாரத்தைத் தாங்க முடியாது அதிலிருந்து மீளுவதற்கான ஓர் எத்தனம் அல்லது அரசியல் இலக்குகளை அடைவதற்கான முயற்சி.

இதில் எதுவாக இருந்தாலும் இந்த முடிவு கரணம் தப்பினால் மரணம் என்ற ஆபத்தான விவகாரம்தான்.

# சகல திணைக்களங்களும் சுகாதாரத்தை பின்பற்றி சேவைகளை வழங்கவேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு



கிளிநொச்சி, மே. 07

கிளிநொச்சிமாவட்டத்திலுள்ளசகலதிணைக்களங்களும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சேவைகளை வழங்க வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றுகாரணமாக ஊடரங்குச்சட்டம் நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஊடரங்குச்சட்டம் தளர்த்தப்பட்டு இயல்புநிலை ஏற்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் அரச திணைக்களங்களை இயங்க வைப்பது தொடர்பான கூட்டம் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் கரைச்சி, கண்டாவளை பூநகரி பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர்கள் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும்; திணைக்கள தலைவர்கள் பொலிஸ் அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தின்போது கருத்துத்தெரிவித்த மாவட்ட அரச அதிபர் ஊடரங்கு வேளைகளில் உரிய நடைமுறைகளையும் சமூக இடைவெளியையும் தனிநபர் சுகாதாரத்தையும் பேணி அனைத்துத்தரப்பும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியிருந்தது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இதே போன்று சமூக இடைவெளி தனிநபர் சுகாதாரம் பொதுச்சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# மக்களின் ஆதரவுடன் தேர்தலை நடத்தலாம் சுகதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி

மக்களின் ஆதரவுடன் தேர்தலை நடத்துவதற்கு இடமுள்ளது என சுகதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

11ஆம் திகதிக்கு இன்னும் பல நாள்கள் உள்ளமையால், எதிர்வரும் நாள்களின் நிலையைப் பார்த்துத்தான் ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் கூற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வழங்கக்கூடிய பாதுகாப்புகளை வழங்கியுள்ளதாகவும் மக்கள் பாதுகாப்பாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை எனவும், எனவே மக்களின் ஆதரவுடன் தேர்தலை நடத்துவதற்கு இடமுள்ளது எனவும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

# அரச நிதியை ஜனாதிபதி கோட்டாபய சர்வாதிகாரமாகப் பயன்படுத்த முடியாது

## சஜித்தின் கட்சிச் செயலாளர் கூறுகின்றார்

கொழும்பு,மே 07

அரச நிதியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வாதிகாரமாகப் பயன்படுத்த முடியாதெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, அரசமைப்பை மீறி அரசாங்கம் செயற்படுவதாகச் சாடினார்.

ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை சட்டவலுவற்றதாக அறிவிக்கக் கோரி சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்தோடு, பொதுத் தேர்தலுக்கான திகதியாக ஜூன் 20ஆம் திகதி குறிக்கப்பட்டுள்ளது எனினும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு, நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டுமென அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

ஆனால் அரசாங்கம், அரசமைப்பு முறைக்கு முரணாகச் செயற்பட்டு வருகிறது. 2020ஆம் ஆண்டுக்கான இடைக்காலக் கணக்கு அறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் 30ஆம் திகதியுடன் அந்தக் காலம் நிறைவடைகின்றது என்றும் கூறிய அவர், நிதி தொடர்பான அதிகாரங்கள் நாடாளுமன்றுக்குக் காணப்படுகின்ற நிலையில், கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியால் அரச நிதியைச் சர்வாதிகாரமாகப் பயன்படுத்த முடியாதெனவும் கூறினார்.

இதன்படியே உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அரசமைப்பின்படி செயற்பட வேண்டுமென்றே தாம் உயர்நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறினார்.

## ஊடக குருகுலம்

ஊடக ஜாம்பவான் திரு வித்தியாதரன் மற்றும் காலைக்கதிரின் அனுபவம்மிக்க ஆசிரியர் குழுவின் கீழ் ஊடகத்துறையினை கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் ஆகியவற்றை அடிப்படையில் இருந்து கற்றுத் தேர்ந்திட காலைக்கதிரின் ஊடக குருகுலத்தில் இணை யுங்கள்.

ஊடகத்துறையில் ஆர்வமுள்ள யாரும் இணைந்துகொள்ளலாம்.

உங்களின் சுயவிபரக்கோவையினை

kalaikkathironline@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தொடர்புகளுக்கு: 076 443 8623

தகவல் - நிர்வாகி
பசுமை ஊடகம்

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# தமிழகத்தில் மீண்டும் மதுக்கடைகள் திறப்பு



தமிழகத்தில் சென்னையைத் தவிர்த்து பிற மாவட்டங்களில் மதுக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளாக வந்து தமிழகத்தில் சிக்கிகொண்டுள்ள வெளிநாட்டவர்கள் முதல் ஆட்களாக மதுக் கடைகளின் முன்பாக வந்து நின்று மதுபானம் கொள்வனவு செய்தனர்.

3 நாளைக்கு ஒருமுறை ஒருவருக்கு 1 போத்தல் மட்டுமே மது விற்கவேண்டும். மது விற்பனையை நீதிமன்றம் கண்காணிக்கும், விதிமீறல் இருந்தால் மதுக்கடைகளை மூட உத்தரவிடப்படும் என்று சென்னை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இணையம் மூலம் பணம் செலுத்தினால் ஒருவர் 2 மதுப் போத்தல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இணையம் மூலம் பணம் செலுத்தும் வசதியை டாஸ்மாக் ஏற்படுத்த வேண்டும். மதுபானம் வாங்குபவரின் பெயர், முகவரி, ஆதார் எண்ணுடன் ரசீது தரப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கோவை ஆவாரம்பாளையத்தில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடையில் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த இருவர் முதல் இரு டோக்கன்களை பெற்று வரிசையில் நிற்கின்றனர்.

ஏனைய இடங்களிலும் குடிப் பிரியர்கள் சமூக இடைவெளியைப் பேணி மிக நீண்ட வரிசைகளில் நின்று மதுவை வாங்குவதில் ஆர்வம் காட்டினர்.

# இந்தியாவில் மூன்றே நாளில் 10 ஆயிரம் பேருக்கு தொற்று!

## 53 ஆயிரத்தை நெருங்கியது எண்ணிக்கை

இந்தியாவில் கடந்த 3 நாளில் 10 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 53 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. .

சீனாவில் உருவான கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழுவதும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதுடன் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது.

இந்தியாவிலும் கொரோனா வைரஸ் வெகு வேகமாகப் பரவி வருவதால் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு மே 17ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த 3 நாளில் 10 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி இந்தியாவில் கொரோனா வைரசால் பாதிப்புஅடைந்தோர் எண்ணிக்கை 52 ஆயிரத்து 952 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவிலேயே மகாராஷ்டிரா மாநிலத்தில்தான் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது.

# மும்பையை புரட்டிப் போடும் கொரோனா வைரஸ் தொற்று!

*கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் மும்பை நகரில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 53 ஆயிரத்தை கடந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 89 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 783 ஆக உயர்ந்துள்ளது. 15 ஆயிரத்து 266 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.*

*கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. மகாராஷ்டிராவில் மொத்தம் 16 ஆயிரத்து 758 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் ஆயிரத்து 233 பேருக்கு நோய்த்தொற்று கண்டறியப்பட்டது.*

*கடந்த 24 மணி நேரத்தில் மும்பையில் 26 பேர் உள்பட மொத்தம் 34 பேர் இந்தியா முழுவதும் உயிரிழந்தனர். இதன் மூலம் உயிரிழப்பு எண்ணிக்கை 651 ஆக உயர்ந்துள்ளது. மும்பையில் இதுவரை 412 பேரும், புனேயில் 122 பேரும் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.*

# ஆந்திர இரசாயன ஆலை ஒன்றில் அதிகாலையில் விச வாயுக் கசிவு!

## 8 பேர் உயிரிழப்பு; மொத்தக் கிராமமும் பாதிப்பு





இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள விசாகப்பட்டினத்தில் தனியார் தொழிற்சாலையில் ஏற்பட்ட இரசாயன விச வாயுக் கசிவால் அதைச் சுற்றியுள்ள ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த இரசாயன வாயுவைச் சுவாசித்த ஒரு சிறுமி உள்பட 8 பேர் உயிரிழந்துள்ளமை இதுவரை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மூவரின் உடல்கள் இரசாயன ஆலைக்கு அருகிலுள்ள பகுதியிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஐவர் மருத்துவமனையில் இறந்துள்ளனர் என்றும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன.

இன்று அதிகாலை 3 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்த இரசாயன வாயுவை சுவாசித்த மக்களுக்கு சுவாசக் கோளாறுகள் மற்றும் கண் எரிச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டபின் அந்த ஆலை இன்று திறக்கப்பட்டது. காலை 3.30 மணியளவில் விபத்து நடந்துள்ளது. நிறுவனம் பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்காததே விபத்துக்குக் காரணம் என்று தெரிகிறது. வேறு ஒரு இரசாயனத்தைப் பயன்படுத்தி இதன் பாதிப்பைக் குறைக்க முயன்று வருகிறோம். இதுவரை 90 – 95 சதவீதக் கசிவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது, என்று இன்று காலை 10 மணியளவில் ஆந்திர மாநில தொழில்துறை அமைச்சர் கௌதம் ரெட்டி தெரிவித்தார்.

1 – 1.5 கிலோ மீற்றர் சுற்றளவுக்குப் அதிக பாதிப்பு நிகழ்ந்துள்ளது. ஆனாலும் சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரை வாயுவின் துர்நாற்றம் வீசியுள்ளது. எல்.ஜி.பொலிமர்ஸ் ஆலைக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது, என்று விசாகப்பட்டினம் மாநகர காவல் ஆணையர் ஆர்.கே. மீனா தெரிவித்தார்.

இந்த வாயுக் கசிவால் சுமார் 200 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் விசாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வினய் சந்த் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகளைப் பார்வையிடவும், பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்கவும் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி இன்று விசாகபட்டினம் செல்கிறார்.

இரசாயன வாயுவை சுவாசித்தவர்கள் அனைவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மோசமாகப் பாதிக்கப்பட்ட 15 முதியவர்கள் விசாகப்பட்டினத்தில் உள்ள கிங் ஜோர்ஜ் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் பணியில் சுமார் ஐம்பது அவசர ஊர்திகள் ஈடுபட்டுள்ளன. பலரும் மயக்க நிலையில் உள்ளனர்.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி ஆலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஸ்டைரீன் (styrene) எனும் இரசாயன வாயு வெளியேறியதாக, விசாகப்பட்டினத்தில் பணியாற்றும் ஆந்திரப் பிரதேச மாநில மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரி ராஜேந்திர ரெட்டி என்பவர் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

மாசுக் கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் அந்தப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலையைச் சுற்றியுள்ள நாயுடு கார்டன், பத்மநாபபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டுவெளியேறி வாகனங்களில் வெளியேறி வருகின்றனர்.

1961ஆம் ஆண்டு ஹிந்துஸ்தான் பொலிமர்ஸ் எனும் பெயரில் இந்த ஆலை நிறுவப்பட்டது. 1978இல் யூபி தொழில் குழுமத்தால் இந்த நிறுவனம் வாங்கப்பட்டது.

அந்த தொழில் குழுமத்திடமிருந்து 1997இல் தென் கொரியாவைச் சேர்ந்த எல்.ஜி நிறுவனம் ஹிந்துஸ்தான் பொலிமர்ஸ் ஆலையை வாங்கி அதற்கு எல்.ஜி பாலிமர்ஸ் என்று பெயரை மாற்றியது.

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் நிலையில், தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அரசு அனுமதி அளித்ததால் இந்த நிறுவனம் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

அதிகாலை 3 மணிக்கு இந்த வாயு கசிவு நடந்தது என்பதால் உறக்கத்திலிருந்த பல மக்களுக்கும் அப்படி ஒரு சம்பவம் நடந்ததே உடனடியாகத் தெரியாமல் போனது.

வாயுவை நிறுத்துவதற்கான முயற்சிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேர்ள் ஹார்பர் மற்றும் இரட்டைக் கோபுர தாக்குதல்களைவிட மோசம் கொரோனா

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவிப்பு

பேர்ள் ஹார்பர் தாக்குதல், நியூயோர்க் இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல் என்பவற்றைவிட மோசமானது கொரோனா பாதிப்பு என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரசின் பிடியில் சிக்கித் தவித்து வருகிறது. இந்த நாடு பிற நாடுகளை விட அதிக பாதிப்பை தினமும் சந்தித்து வருகிறது.

அமெரிக்காவில் கொரோனா வைரசால் ஏற்படுகிற உயிரிழப்பு 70 ஆயிரம் என்ற எண்ணிக்கையைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. இன்று காலை நிலவரப்படி 74 ஆயிரத்து 799 பேர் உயிரிழந்திருந்தார்கள்.

12 லட்சத்து 63 ஆயிரம் பேருக்கு இதுவரையில் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களில் 2 லட்சத்து 13 ஆயிரம் பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளார்.

அங்கு ஊரடங்கு நடவடிக்கைகளைத் தளர்த்தி,



பொருளாதார நடவடிக்கைகளைப் பல மாகாணங்களும் திறந்து விடுகின்றன. ஆனால் நேற்று மட்டும் அங்கு 2 ஆயிரத்து 528 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

இதையடுத்தே, கொரோனா வைரஸ் நெருக்கடி பேர்ள் ஹார்பர் தாக்குதல் மற்றும் இரட்டைக் கோபுரத் தாக்குதலைவிட மோசமானது என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக மகா போரின்போது ஹவாய் தீவின் பேர்ள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கக் கடற்படை மீது ஜப்பான் திடீரென சரமாரியான வான்வழிக் குண்டுவீச்சை நடத்தியது. 1941ஆம் ஆண்டு டிசெம்பர் 7ஆம் நாள் காலை 8 மணிக்கு முன்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

2400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அமெரிக்கக் கடற்படை மற்றும் வான்படையின் கணிசமான பகுதி அழிக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் நாள் அமெரிக்க இரட்டைக் கோபுரம் மற்றும் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் ஆகியவற்றின் மீது அல்குவைதா ஆயுதப் படையினர் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர்.

கடத்தப்பட்ட பயணிகள் வானூர்திகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் சுமார் 3 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் பெரும் அதிர்வலையை இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியது.

# கொரோனாவை கட்டுக்குள் வைத்திருப்பது கடும் சவால்

## சீன அதிபர் ஜி ஜின் பிங் தெரிவிப்பு



கொரோனா பரவலைத் தடுப்பதும் அதனைக் கட்டுக்குள் வைப்பதும் இன்னும் சவாலாகவே உள்ளது என்று சீன அதிபர் ஜி ஜின் பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சீன அதிபர் ஜி ஜின் பிங் கொரோனாவைக் கட்டுக்குள் வைப்பது தொடர்பாக எதிர்கொண்டு வரும் நிச்சயமின்மையைப் பற்றி பகிர்ந்துகொண்டார். மேலும், கொரோனாவால் பாதிப்புக்குள்ளான நிறுவனங்களை மீட்பது குறித்தான திட்டங்களும் அக்கூட்டத்தில் பேசப்பட்டன.

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் சீனாவின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கடந்த 28 ஆண்டுகளில் இல்லாத அளவில் 6.8 சதவீதம் சரிந்தது. கொரோனா வைரஸ் பரவலால் சீனாவில் தொழில்செயல்பாடுகள் முடங்கியிருந்ததால் வேலையிழப்பு, சிறு குறு நிறுவனங்கள் வங்குரோத்து நிலைக்குச் சென்றிருப்பது, வருவாய் இழப்பு போன்றவை ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் தொழில் செயல்பாடுகளை மீட்டெடுக்கும் வகையில், நிறுவனங்களுக்கு உத்தரவாதமில்லாத கடன்கள் வழங்கப்படும் என்றும் வட்டி மற்றும் கடன் செலுத்துவதற்கான கால அளவு நீட்டிக்கப்படும் என்றும் சீன அரசு அறிவித்துள்ளது.

சீனாவில் நோய்த் தொற்று வெகுவாகக் குறைந்துள்ள நிலையில், சீனா அதன் ஊரடங்கை முற்றிலும் தளர்த்தி, இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. வணிக வளாகங்கள், நிறுவனங்கள், போக்குவரத்து என அனைத்தும் வழக்கம்போல் செயல்படத் தொடங்கியுள்ளன.

# பிரிட்டன் முதியோர் இலங்களில் 6,300 பேர் கொரோனாவால் சாவு

## மேலும் ஒரு லட்சம் பேருக்குத் தொற்று

*பிரிட்டனில் முதியோர் இல்லங்களில் வசித்தவர்களில் 6 ஆயிரத்து 686 பேர் மூன்றே வாரங்களில் உயிரிழந்துள்ளனர். அவர்களில் அனேகமானோரின் இறப்புக்கு கொரோனா தொற்றே காரணமாக இருந்துள்ளது. .*

*பிரிட்டனில் சிறியதும், பெரியதுமாக 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதியோர் பராமரிப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில்*



*200 இல்லங்கள் மருத்துவ வசதிகள் உள்ளவை.*

*இந்த முதியோர் இல்லங்களில் 4.11 லட்சத்துக்கும் அதிகமான முதியவர்கள் தங்கியுள்ளனர். இவர்களில் சுமார் 22 முதல் 25 சதவீதம் பேர் கொரோணவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தொடர்ந்து மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.*

*இது தொடர்பாக, இங்கிலாந்தின் தேசிய புள்ளியியல் துறை அதிகாரபூர்வதகவல்ஒன்றைவெளியிட்டது. அதில், 'நாட்டின் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் மே மாதம் முதலாம் திகதி வரையிலான 21 நாள்களில் மட்டும் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகி 6 ஆயிரத்து 686 பேர் உயிரிழந்துள்ளனர்' என்று கூறப்பட்டுள்ளது.*

*இதனால், பராமரிப்பு இல்லங்களில் வசிக்கும் முதியவர்களுக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கத் தொடங்கியுள்ளது.*

### ஊரடங்குத் தளர்வு குறித்து

# உலக சுகாதார அமைப்பு நாடுகளுக்கு எச்சரிக்கை

கொரோனா தொற்று முழுமையாகக் குறையாத நிலையில் உலக நாடுகள் ஊரடங்கைத் தளர்த்துவதில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

உலக நாடுகளில் கடந்த நான்கு மாதங்களாகக் கொரோனா வைரஸ் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 180க்கும் அதிகமான நாடுகள் பொருளாதார ரீதியாகவும், நோய்த் தொற்று சார்ந்தும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளன.

இதில் அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ளன. சரிந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் உலக நாடுகள் ஊரடங்கைத் தளர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகள் இதற்கான முன்னெடுப்பை எடுக்க அமெரிக்காவும் இந்த வரிசையில் இணைந்துள்ளது.

தொற்று முற்றாகக் கட்டுக்குள் வராத நிலையில் ஊரடங்கைத் தளர்த்துவது ஆபத்து என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

"உலக நாடுகள் ஊரடங்கைத் தளர்த்தும் போது கூடுதல் கவனம் தேவை. ஊரடங்கைத் தளர்த்தினால் வைரஸ் மீண்டும் பரவலாம். உலக நாடுகள் இதனைக் கவனமாக அணுக வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ்.

# இந்தோனேசியாவில் நேற்றிரவு நிலநடுக்கம் 6.9 ரிக்டரில் பதிவு

இந்தோனேசியாவில் நேற்றிரவு ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கம் காரணமாக, மக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியேறினர்.

இந்தோனேசியாவின் பாண்டா கடற்பகுதியில் நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலுக்கடியில் 117 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.9 அலகாக பதிவாகியிருந்தது.

நிலநடுக்கம் காரணமாக அருகில் உள்ள கிசார் தீவு உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் ஆட்டம் கண்டன. வீடுகள், கட்டடங்கள் கடுமையாகக் குலுங்கின. தூங்கிக்கொண்டிருந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

பாண்டா கடலில் இருந்து 620 கி.மீ. தொலைவில் உள்ள ஆஸ்திரேலியாவின் டார்வின் நகரிலும் கடுமையான நிலஅதிர்வு உணரப்பட்டது. மக்கள் அலறியடித்து வீடுகளை விட்டு வெளியேறினர். இந்த நிலநடுக்கம் கணிசமானதாக இருந்தாலும் சுனாமி எச்சரிக்கை ஏதும் வெளியிடப்படவில்லை. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு செய் கின்றனர்.

சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை ஏற்படுத்தக்கூடிய 450 எரிமலைகள் கொண்ட பசிபிக் நெருப்பு வளைய பகுதியில் இந்தோனேசியா உள்ளது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் குற்றச்செயல் குறைவடைவு

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்



வவுனியா, மே. 07
கடந்த இரு மாதங்களில் வவுனியாவில் பெரியளவிலான குற்றச்செயல்கள் எவையும் இடம்பெறவில்லை என வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

கொரோனா தாக்கம் தொடர்பில் வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் பரம்பலைக் கட்டுப்படுத்த பொலிஸார் சுகாதார துறையினர், படைத்தரப்பு மற்றும் மாவட்ட செயலகத்துடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

கிருமி தொற்று நீக்கி கிருமிகளை விசிறல், கொரோனா தொற்று சந்தேக நபர்களை அடையாளம் காணல், ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், ஊரடங்கு தளர்வின்போது நகரில் சுகாதார நடைமுறைகளைக் கவனித்தல், பாஸ் அனுமதி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு வேலைகளைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கான விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டு அர்ப்பணிபுடன் மக்களதும், அரச அதிகாரிகளினதும் பங்களிப்புடன் கடமைகளைச் செய்கின்றனர்.

கொரோனா தொடர்பில் பொலிஸார் இரண்டு வகையான சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். மக்களைப் பாதுகாத்தல் மற்றும் தம்மை பாதுகாத்தல் ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே கடமையாற்றுகிறார்கள். கொரோனா தொற்று காரணமாக நடைமுறையில் இருந்த ஊரடங்குச் சட்ட காலப்பகுதியில் வவுனியாவில் குற்றச் செயல்கள் எவையும் பெரியளவில் இடம்பெறவில்லை. மதுபானச்சாலைகள் பூட்டப்பட்டமையால் சில இடங்களில் இடம்பெற்ற கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மக்களும் பொலிஸாருக்கு உதவி வருகின்றனர் – என்றார்.

## அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, மே.07
5000 ரூபாய் கொடுப்பனவை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவு வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களின் சேவையை கௌரவித்து, அவர்களுக்கான மேலதிக கொடுப்பனவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிராம உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்பநல சுகாதார தாதியர் ஆகியோருக்கு இந்த மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

## தாக்குதலில் இளைஞன் காயம்!

வவுனியா, மே. 07
வவுனியா -செட்டிக்குளம், வீரபுரம் பகுதியில் அயல் வீட்டார் நேற்று மாலை மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையே கடந்த சில நாள்களாக இருந்த கருத்து முரண்பாடு காரணமாக அந்த இளைஞன் மீது அயல் வீட்டார் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் செட்டிக்குளம் வீரபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய கார்த்திகேசு தவநேசன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிளிநொச்சி சந்தைக்குள் வெள்ளம்

கிளிநொச்சி, மே. 07
கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று மாலை காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் கிளிநொச்சி பொதுச்சந்தை வியாபாரிகளின் பெருமளவு மரக்கறிகள் மழையில் நனைந்துள்ளது .

கொரோனா பாதுகாப்பு கருதி சமூக இடைவெளியைப் பேணும் வகையில் சந்தையின் வெளிப்புறத்தில் தகரப் பந்தல்கள் அமைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் திடீரெனப் பெய்த கடும் மழை காரணமாக விற்பனை பகுதிக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது.

அத்தோடு மழையோடு கடும் காற்றும் வீசியதால் தகரக் கொட்டகைகள் பிடுங்கி வீசப்பட்டது.



## முழங்காவிலில் கடும் மழை பப்பாசிச் செய்கை பாதிப்பு



கிளிநொச்சி, மே. 08
கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் நேற்று பலத்த காற்றுடன் பெய்த மழை காரணமாகப் பப்பாசிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் 10 லட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயி தெரிவிக்கின்றார்.

அதே பகுதியைச் சேர்ந்த பரமநாதன் சிவகுமார் என்பவரின் பப்பாசித் தோட்டமே சேதமடைந்துள்ளது.

இதனால் அறுவடைக்கு தயாராக இருந்த 500 இற்கும் மேற்பட்ட பப்பாசிகள் முறிந்து நாசமாகியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று பிற்பகல் பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் பரவலாக மழைவீழ்ச்சி பதிவாகியமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir
தொழிற்சாலை
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி



நாளை (08/005/2020) தலைப்பு
தொழிற்சாலை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# முடி திருத்த மட்டும் அனுமதி தாடி ஒதுக்குவதற்குத் தடை

கொழும்பு, மே. 08

சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகு நிலையங்களை மீண்டும் திறக்கக் கட்டுப்பாடுகளுடன் அனுமதியளிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண மற்றும் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பணித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் உதவிப் பணிப்பாளர்நாயகம்லக்ஸ்மன்கம்லத் தெரிவிக்கையில்–

அழகு நிலையங்கள் மற்றும் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு உரிய நடைமுறைகளைப் பின்பற்றும் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி, சிகை அலங்கரிப்பு நிலையங்களில் முடி திருத்தத்துக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தாடி மற்றும் மீசை திருத்தம் செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

இதற்கு காரணம், சேவையைப் பெறுபவரின் வாயைத் தொட முடியாது என்பதாகும். அத்தோடு சேவை வழங்குநருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான சேவை பெறும் நேரம் குறுகியதாக இருக்க வேண்டும்.

சேவை வழங்குநர் ஹி95 வகை முகக்கவசத்தை அணிந்து கொள்ளவேண்டும்.திறப்பதற்கு முன்பும், மூடப்பட்ட பின்னரும் அழகு நிலையங்களை கிருமி நீக்கம் செய்யப்படுவது கட்டாயமாகும்.

மேலும் வரவேற்புரைகள் பைகளில் கழிவுகளை சேகரித்து பின்னர் அவற்றை அழிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. சிகை அலங்கரிப்பு நிலையத்தின் நுழைவாயிலில் கைகளுவுதற்கு ஓடும் நீர் குழாய் அமைக்கப்படவும் பரிந்துரைக்கப்படுகிறது. தொழிலாளர்களின் உடல் வெப்பநிலையை தினமும் கண்காணிக்க மற்றொரு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மற்றும் அழகு நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு முன் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரயிடம் அனுதி கோரப்பட வேண்டும். அதன்படி வளாகங்கள் பரிசோதிக்கப்படும், பின்னர் அவை அனைத்து சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலமைகளையும் கடைபிடிப்பதாகக் கண்டறியப்பட்டால், அப்போதுதான் அழகு நிலையங்களைத் திறக்க சான்றிதழ் வழங்கப்படும் – என்றார்.

# மணல், கனிமங்களை ஏற்றிச் செல்லும் உரிமம் வழங்கும் நடைமுறையில் தளர்வு

கொழும்பு, மே. 07

மணல் உள்ளிட்ட கனிய வளங்களை அகழ்வதற்கு வழங்கப்படும் உரிமத்தில் சில தளர்வுகள் வழங்கப்படவுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய தளர்வு எதிர்வரும் மே 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்று அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, கனிய வளத்தை அகழ்வதற்கான இடம் மட்டுமே சேர்க்கப்படும். உரிமம் வழங்குவதில் இதுவரை பயன்படுத்தப்படும் வாகனத்தின் இலக்கம் உரிமத்தில் சேர்க்கப்படாது.

மணல் போக்குவரத்து அனுமதியில் பொலிஸ் பிரிவுகள் சேர்க்கப்படாது. அத்துடன், எந்த நேரத்திலும் கனிமங்களை கொண்டு செல்ல அனுமதியளிக்கப்படும்.

தளர்வளிக்கப்பட்ட போக்குவரத்து அனுமதிகளுக்கு ஜூன் முதலாம் திகதி தொடக்கம் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் பணித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# பலாலியில் 40 குடும்பங்களுக்கு இராணுவத்தின் உணவுப் பொதி



யாழ்ப்பாணம், மே. 07

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவினால் பலாலி வடக்குப் பகுதியில் உள்ள 40 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கொரோனா தாக்கத்தினால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்கள் தெரிவு செய்யப்பட்டு வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

# மனித உரிமை ஆர்வலரின் நாய் சுட்டுப் படுகொலை!

நீர்கொழும்பில் சம்பவம்





கொழும்பு, மே. 07

நீர்கொழும்பு பெரியமுல்லை, புனித அந்தோனியார் வீதியில் உள்ள வீடொன்றில் வளர்க்கப்படும் செல்லப் பிராணியான நாயொன்று இன்று காலை 6 மணியளவில் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளது.

பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளரும் , காணாமற்போனோர் குடும்ப அங்கத்தவர் ஒன்றியத்தின் தலைவருமான பிரிட்டோ பெர்னாண்டோவின் வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் ‘மெக்ஸ்’ என்று அழைக்கப்படும் நாயே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பிரிட்டோ பெர்னாண்டோ ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

எனது வீட்டில் இரண்டு நாய்கள் வளர்க்கப்படுகின்றன. அதில் மெக்ஸ் என்று செல்லப் பெயரில் அழைக்கப்படும் நாயை அதன் இயற்கைக் கடன்களை நிறைவேற்றவதற்காக காலை ஆறு மணியளவில் வெளியில் செல்ல அனுமத்தேன்.

ஐந்து நிமிட நேரத்தில் துப்பாக்கிச் சத்தம் ஒன்று கேட்டது. நான் வீதிக்கு வந்து பார்த்தபோது, எனது நாய் இரத்தக் காயங்களுடன் தட்டுத் தடுமாறியவாறு வருவதை அவதானித்தேன். எனது வீட்டின் முன்பாக வீதியில் விழுந்து பின்னர் அது இறந்துபோனது. எமது வீட்டுக்கருகில் உள்ள ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரையே நான் இதுதொடர்பாக சந்தேகிக்கின்றேன். அவரது வீட்டின் முன்பாகவே நாய் துப்பாக்கியால் சுடப்பட்டதற்கான தடயங்கள் உள்ளன. உடனடியாக இதுதொடர்பாக 119 பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அறிவித்தேன். இந்த வீதியில் யாரிடம் துப்பாக்கி உள்ளதென்பதை ஆராயவேண்டும் என்று தெரிவித்தார்.

சம்பவத்தை அடுத்து நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயகுமார வுட்லர் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பிரிட்டோ பெர்னாண்டோ சந்தேகிக்கும் பொலிஸ் அதிகாரியின்வீட்டுக்கு முன்பாக உள்ள வீடொன்றின் மதில் ,துப்பாக்கி சன்னம்பட்டு சேதமடைந்துள்ளதை காணமுடிந்தது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி காட்சிகளையும் ஆராய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# பம்பைமடு குப்பைமேட்டில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டில்!





வவுனியா,மே.07

வவுனியா பம்பைமடு குப்பைமேட்டில் ஏற்பட்ட தீப்பரம்பல் குடிமனையை நோக்கி நகர்ந்த நிலையில் நகரசபை தீயணைப்பு படையால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது :-

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள குப்பை மேட்டில் நேற்றையதினம் காலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வவுனியா நகரசபையின் தீயணைப்பு பிரிவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நகரசபை மற்றும் பிரதேச சபையின் தீயணைப்பு வாகனங்கள் விரைந்து செயற்பட்டு தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இதனால் அருகில் அமைந்துள்ள குடியிருப்பு பகுதிக்கு தீ பரவிச் செல்கின்றமை தடுக்கப்பட்டது.

# இடைக்காலக் கணக்கறிக்கையின் பெயரில் ரூ.1,229 கோடி முறையற்ற ரீதியில் ஒதுக்கீடு

## அம்பலப்படுத்துகின்றது மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு,மே.07

மார்ச் 2ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் பின்னரான 6ஆம் திகதியன்று, இடைக்காலக் கணக்கறிக்கை மூலம் 1,229 கோடி ரூபாவை அரசாங்கம் இரகசியமான முறையில் நிறைவேற்றியுள்ளதென, மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அரச நிதி நிலைவரம் தொடர்பான அறிக்கையில் இதனைக் காணமுடிவதாகக் கூறினார்.

இடைக்காலக் கணக்கறிக்கை ஊடாக அரச செலவீனங்களுக்கான நிதி ஒதுக்கப்படுமாயின், அது தொடர்பில் நாடளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமெனத் தெரிவித்த அவர், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், 12.29 பில்லியன் ரூபா நிதி எவ்வாறு நிறைவேற்றப்பட்டதென்பது சர்ச்சையாக உள்ளதென்றும் கூறினார்.



இடைக்கால கணக்கறிக்கை ஊடாக நிதி ஒதுக்கீட்டை நாடாளுமன்றமே மேற்கொள்ள முடியுமெனச் சுட்டிக்காட்டிய அவர், ஜனாதிபதியாலோ அல்லது வேறு எந்த நபராலோ, இதனை மேற்கொள்ள முடியாதெனவும் தெரிவித்த அவர், 2020ஆம் ஆண்டுக்காக ஒரே ஓர் இடைக்கால கணக்கறிக்கையே நிறைவேற்றப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பான உண்மையை அறிவதற்கு, மக்களுக்கு உரிமை உண்டெனத் தெரிவித்த அவர், இவ்வாறு இடைக்கால கணக்கறிக்கையை தயாரித்தவர் யார், அதற்கான தீர்மானங்களை மேற்கொண்டவர் யார், எவ்வாறு அது நிறைவேற்றப்பட்டது போன்ற கேள்விகளுக்கான பதில்களை, நிதி அமைச்சு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்கள், நாட்டுக்காகப் பாரிய அர்ப்பணிப்புகளைச் செய்கின்றனர் என மக்களுக்கு வெளிக்காட்டிக் கொண்டு, இராஜாங்க அமைச்சர்களுக்கு மக்கள் பணத்தில் பல்வேறு வரப்பிரசாதங்களை வழங்கி வருவதாக தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளைத் தடுக்க, தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், ஹந்துன்நெத்தி கோரினார்.

இராஜாங்க அமைச்சர்களுக்கு வீடு, வாகனம் போன்ற வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது தேர்தல் சட்ட மீறலாகும். ஒருவருக்கு 240,000 ரூபாய் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதனை 5,000 ரூபாய் கொடுப்பனவாக 48 குடும்பங்களுக்கு வழங்கலாம் என சுட்டிக்காட்டிய அவர், அமைச்சர்களுக்கு 7, 8 வாகனங்கள் உள்ளனவென்றும் சுட்டிக்காட்டினார்.

# தொழில் திணைக்களம் 11 தொடக்கம் இயங்கும்

சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி இந்த மாதம் 11ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படும் நிறுவனங்களை திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தொழில் ஆணையாளர் நாயகம் ஏ. விமலவீர தெரிவித்தார்.

அதற்கமைய, அத்தியாவசியமான சேவை குழுக்களை மாத்திரம் பயன்படுத்தி, பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, தொழில் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை தொழிலாளர்கள் முன்வைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாகவும் நிறுவனங்களைக் கிருமி தொற்று நீக்கி, சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு அலுவலக சபையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# ஐந்து கைதிகளுக்கு இன்று யாழ். சிறையில் மன்னிப்பு





யாழ்ப்பாணம், மே. 07

வெசாக் பௌர்ணமி பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் 228 கைதிகளுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறு குற்றங்களுக்காக நீதிமன்றினால் தண்டப்பணம் விதித்து அதனைச் செலுத்த முடியாது தண்டனை அனுபவித்த 5 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன் னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவருக்கு மற் றொரு வழக்கில் தண்டனைக் காலம் நிறைவடையாததால் அந்தக் கைதி மீளவும் சிறையில் அடைக்கப்பட்டார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த மூவர், தற்போதைய ஊரடங்கு நடைமுறையால் சிறைச்சாலை வாகனத்தில் அவர்களது சொந்த இடங்களுக்குக் கொண்டு சென்று விடப்பட்டனர்.

# கத்திக் குத்தில் ஒருவர் மரணம்



மாரத்தென்ன பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பின்னவலை பம்புகொலை கீழ்ப்பிரிவை சேர்ந்த 43 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலுகுமார் ராஜ் என்பவரே கத்திக்குத்து இலக்காகி பலியாகியுள்ளார்.

பம்புகொலை கீழ்பிரிவு தோட்டத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப் பாக மாறியே கத்திக்குத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது. மோதலில் ஈடுபட்ட இரு வரும் அந்த நேரம் கசிப்பு அருந்தியிருந்தனர் எனப் பின்னவல பொலி ஸார் தெரிவித்தனர்

கத்திக்குத்து சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபரை பலாங்கொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த பின்னவல பொலிஸார் நடவ டிக்கை எடுத்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2020 இல் வெளியிடப்பெற்றது.